பட்டிருக்கிற—வீடுகள் முக்கால்வாசி போலித்தனமான வீடுகளைக் கட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, இப்போது வீடு கட்டுவதற்கே நமக்கு நேரம் போதவில்லை அதைப்பற்றிப் பிறகு ஆராயலாம்.

ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்

* 8170—**திரு. எஸ். ஆர். சிவலிங்கம்** :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் வறட்சி அதிகமாக இருப்பதால் விவசாயிகளுக்கு இலவசமாக ஆழ்துளைக் கிணறுகள் போட்டுத்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வறட்சிப் பகுதிகளில், விவசாயிகளுக்கு இலவசமாக ஆழ்துளைக் கிணறுகள் போட்டுத்தரும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளின் துயர் துடைக்கும் வண்ணம் விவசாயிகளின் கடன் ரூ. 508.15 கோடி தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணமாக 18.88 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். இந்த வேளாண்மை கிராமப்புற கடன் நிவாரணத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்திய முதல் மாநிலம் நமது தமிழ் மாநிலம்தான். அதுமட்டுமல்லாது 12 இலட்சம் பேர் பயனடையும் விதத்தில் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கியதும் நமது முதல்வர் அவர்கள் தான். . . . . .

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : அதுபோல் சேலம் மாவட்டத்திற்கு மட்டும் வறட்சியின் காரணமாக கருணையோடு மறுபரிசீலனை செய்து இலவச ஆழ்துளைக் கிணறுகள் அமைத்திட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1991 சனவரி 22]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பு குறிப்பிட்டது போல தற்போது இத்திட்டம் அமலில் இல்லை.

10-05 மணி

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு உண்மையிலேயே பலன்தரக்கூடிய இந்த ஆழ்துளைக் குழாய் அமைக்கும் திட்டத்தை அரசு இப்போது நிறுத்தி வைத்திருப்பதாகக் கூறுகிறார்களே, இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு மிக மிக முக்கியமான திட்டம் என்பதால் நிலத்தடி நீர் அதிகமாக இருக்கக்கூடிய பகுதியிலே இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற இந்த அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, தற்போதைக்கு இல்லை.

திரு. க. அர்ச்சுனன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மாவட்டங்கள் பல இருந்த போதிலும், சேலம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 60 சதவீதம் மழைக் குறைவினால் இப்போதே கடுமையான வறட்சி நிலவுகிறது. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தப் புள்ளி விவரம் அமைச்சர் அவர்களுக்கும் கிடைத்திருக்கும். ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் வறண்டு போகக் கூடிய சூழ்நிலையையும் நீங்கள் அறிவீர்கள். எனவே இந்த வறட்சியைப் போக்குகிற வகையிலே உடனடியாகப் போர்க்கால நடவடிக்கை எடுக்கப் படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தகவலைத் தெரிவித்து, அதிலிருந்து பரிகாரம் தேடலாம்.

*** விவசாயப் பண்ணை அமைத்தல்**

*** 11261 திரு. ரெ. பிச்சைமுத்து** :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரம்பலூர் வட்டத்தில் விவசாயப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?